


**02. 02. 2026**

தலைப்புச் செய்திகள்

1. நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் மக்களவையில் இன்று தொடங்கியது.

2. நாட்டின் எதிர்காலத்திற்கான தொலைநோக்கு திட்டங்களை குடியரசு தலைவரின் உரை பிரதிபலிப்பதாக மத்திய அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

3. செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பில் நவீன சுற்றுலா உள்கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்..

4. முசிறி – நாமக்கல் வழித்தடம் தேசிய நெடுஞ்சாலையாக தரம் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு. கே. என். நேரு குறிப்பிட்டுள்ளார்.

5. ஆசிய துப்பாக்கி சுடும் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்கியது.

இனி விரிவான செய்திகள்

***********

நாடாளுமன்றம்

நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுதலைவர் திருமதி திரௌபதி முர்முவின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் மக்களவையில் இன்று தொடங்கியது.

இத்தீர்மானத்தை அவையில் கொண்டு வந்த மத்திய அமைச்சரும், பிஜேபி உறுப்பினருமான திரு.சர்பானந்த சோனோவால், நாட்டின் எதிர்காலத்திற்கான உத்வேகம்மிகு தொலைநோக்கு திட்டங்களை குடியரசு தலைவரின் உரை பிரதிபலிப்பதாக எடுத்துரைத்தார்.

சமூகநீதி, உள்ளடக்கிய வளர்ச்சி, வளர்ச்சி அடைந்த பாரதத்திற்க்கான அர்ப்பணிப்புமிகு நடவடிக்கைகள் போன்றவை இந்த உரையில் இடம்பெற்றிருந்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் அனைவருக்குமான வளர்ச்சி என்ற நோக்கம் அரசிற்கு வழிகாட்டும் கொள்கையாக திகழ்கிறது என்றார்.

நரேந்திரமோடி அரசு பதவி ஏற்ற பின்னர், 4ஆவது பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்ததை சுட்டிக்காட்டிய அமைச்சர், வளர்ச்சி அடைந்த பாரத இலக்கை எட்டும் வகையில் வேகமாக வளர்ச்சிபெறும் நாடாக இந்தியா தொடர்ந்து செயலாற்றி வருவதாக குறிப்பிட்டார்.

நேரடி பண பரிவர்த்தனை திட்டத்தின் கீழ், 44 லட்சம் கோடி ரூபாய், பயனாளிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

மத்திய அரசின் முயற்சிகளாலும், நல திட்டங்களாலும், 25 கோடி மக்கள் வறுமையிலிருந்து மீட்கப்பட்டதாக திரு.சர்பானந்த சோனோவால் தெரிவித்தார்.

***********

கிரண் ரிஜிஜூ

முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு மக்களவையில் 18 மணி நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

3 நாட்கள் நடைபெறும் இந்த விவாதத்திற்கு பின்னர் பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை மறுநாள் இதற்கு பதில் அளிப்பார் என்றார்.

மாநிலங்களவையில் இதுகுறித்து விவாதிக்க 16 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

***********

தர்மேந்திரபிரதான்

நாடு முழுவதும் கஸ்தூரி பாய் காந்தி, பாலர்பள்ளியில் 7 லட்சத்திற்கும் மேற்பட்ட மாணாக்கர் பதிவுசெய்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், இதில் 3 லட்சத்து 77 ஆயிரம் பேர் SC ST பிரிவை சேர்ந்தவர்கள் என்றும்,

2 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இதர பிற்படுத்தப்பட்ட மாணாக்கர் என்றும் கூறினார்.

இப்பிரிவு மாணாக்கரின் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு உண்டு உறைவிட பள்ளிகளை உருவாக்க 2004 ஆம் ஆண்டு இந்த திட்டம் தொடங்கப்பட்டதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

இப்பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் பதிவு விகிதம் தொடர்ந்து அதிகரித்து வருவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மகளிருக்கு கல்வி மூலம் ஆளுமையை வழங்க மத்திய அரசு உறுதி செய்வதாக கூறிய அமைச்சர் அனைத்து மாவட்டங்களிலும் மகளிருக்கான விடுதிகள் ஏற்படுத்தப்படும் என்று பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

***********

பங்கஜ் சவுத்ரி - மக்களவை

2024-25ம் நிதியாண்டில் 8 லட்சத்து 35 ஆயிரம் காப்பீடுகளுக்கு உரிய தொகை செலுத்தப்பட்டுள்ளதாக மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ் சவுத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றிற்கு இன்று பதில் அளித்த அவர் 2014-ம் ஆண்டிலிருந்து விவசாயிகள் உட்பட நாட்டு

மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு காப்பீடு திட்டங்களை மத்திய அரசு அறிமுகம் செய்ததாக சுட்டிக்காட்டினார்.

பிரதமரின் சுரக்ஷா பீமாகாப்பீடு திட்டத்தில் 50 சதவிகித பெண்கள் இணைந்துள்ளதாகவும்,

ஜீவன்ஜோதி காப்பீட்டில் 6 லட்சத்து 30 ஆயிரம் பேருக்கு காப்பீட்டு தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும்,

பொதுகாப்பீட்டில் ஒரு லட்சத்து 67 ஆயிரம் பேர் பயனடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

சுகாதார காப்பீட்டு திட்டத்தின் கீழ் 99 ஆயிரம் பேருக்கு உரிய காப்பீடு தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

காப்பீடு திட்டங்களை முறைகேடாக பயன்படுத்துபவர்களை கண்டறிந்து தண்டனை வழங்கும் வகையில் காப்பீட்டு ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

***********

பாட்டில்

நாட்டில் உள்ள அனைத்து கிராம குடியிருப்புகளுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குவதை மத்திய அரசு உறுதிசெய்துள்ளதாக மத்திய ஜல்சக்தி துறை அமைச்சர் திரு.சி.ஆர்.பாட்டில் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், 16 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள்

தூய்மையான பாதுகாப்பான நீரை தங்கள் இல்லங்களிலேயே பெறுவதாக எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் 25 லட்சம் மகளிருக்கு நீரின் தரத்தை அறிவதற்கான பயிற்சி வழங்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

***********

ஜெய்சங்கர்

மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் 3 நாள் அரசு முறை பயணமாக இன்று அமெரிக்கா செல்கிறார்.

அந்நாட்டில் அரியவகை கனிமங்கள் தொடர்பான அமைச்சர்கள் நிலையிலான உயர்மட்ட கூட்டத்தில் அவர் பங்கேற்கிறார்.

வலுவான விநியோக சங்கிலி, தூய்மை எரிசக்தி பரிவர்த்தனை, கனிமங்கள் சார்ந்த ஒத்துழைப்பு போன்றவை குறித்து இந்த கூட்டத்தில் முக்கியமாக விவாதிக்கப்படும் என்று வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டாக்டர் ஜெய்சங்கர் அமெரிக்க உயர் அதிகாரிகளுடனும் ஆலோசனை மேற்கொள்கிறார்.

***********

முதலமைச்சர்

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் 100 கோடி ரூபாய் மதிப்பில் நவீன சுற்றுலா உள்கட்டமைப்பு

ஏற்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மாமல்லபுரத்தில் தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சிமாநாட்டை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், நாட்டின் சிறந்த சுற்றுலா தலமாக தமிழகத்தை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இத்துறையின் கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

இம்மாநாட்டின் ஒருபகுதியாக 22 ஆயிரத்து 794 கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதோடு, சுற்றுலாத்துறையில் 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இதன்மூலம் மாநிலத்தில் 66 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

***********

ஆளுநர்

சிதம்பரம் அண்ணாமலை பல்கலைகழகத்தின் 87ஆவது பட்டமளிப்பு விழாவில் பல்கலைகழக வேந்தரும், தமிழக ஆளுநரமான திரு.ஆர்.என்.ரவி ஆயிரத்து 14 மாணாக்கருக்கு பட்டங்களை தற்போது வழங்கிவருகிறார்.

முன்னதாக சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஆளுநர் சுவாமி தரிசனம் மேற்கொண்டார்.

ஆளுநரின் வருகையை ஒட்டி பல்கலைகழக பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

***********

நேரு, அன்பில்

திருச்சி முசிறி ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இன்று நடைபெற்ற நூற்றாண்டு விழாவில் மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி 10, 12ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணாக்கருக்கு நினைவு பரிசுகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு.கே.என்.நேரு திமுக அரசு திருச்சி மாவட்ட மேம்பாட்டிற்காக கடந்த நான்காண்டுகளில் 34 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்களை செயல்படுத்தியதாக எடுத்துரைத்தார்.

முசிறி நாமக்கல் வழிதடத்தை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

முசிறி பேரூராட்சி நகராட்சியாக உயர்த்தப்பட்டு பல்வேறு நல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி தமிழகத்தில் 2 ஆயிரத்து 211 பள்ளிகள் நூற்றாண்டு விழா கண்டுள்ளதாக குறிப்பிட்டார்.

***********

பட்ஜெட் வரவேற்பு

மத்திய அரசின் 2026-27-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மின்னணு சார்ந்த தொழில்நுட்பத்துறைக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது என்று இந்திய தொழில் கூட்டமைப்பின் திருச்சி பிரிவு தலைவர் திரு.அஜய் ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

நாடுமுழுவதும் தொழில்நுட்ப திறனை மேம்படுத்தும் வகையில் பள்ளி கல்லூரிகளில் கணினி ஆய்வகங்கள் அமைக்கப்படுவது மாணாக்கருக்கு பெரிதும் பயனளிக்கும் என்று திருச்சியை சேர்ந்த கல்லூரி மாணவி தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

நாகை

நாகை மாவட்டத்தில் சம்பா அறுவடை பணிகள் தொடங்கப்பட்ட முதல்நாளே நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

துப்பாக்கிசுடுதல்

ஆசிய துப்பாக்கி சுடும் போட்டி புதுதில்லியில் இன்று தொடங்கியது.

வரும் 14ஆம் தேதிவரை நடைபெறும் இப்போட்டியில் இந்தியா பங்களாதேஷ் உள்ளிட்ட 17 நாடுகள் பங்கேற்றுள்ளன.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது